සියලුම හිමිකම් ඇවිරිණි]
முழுப்பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

2022

ஆசிரியர் : ஏ.எம். சனூஸ்

அறிவுத்தாரகை ARIVUTHTHARAHAI 5

EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOOLS AND FOR THE AWARD OF BURSARIES, MODEL, 2022

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை, 2022

வினாத்தாள் - I

இறுதிக் கருத்தரங்கு

12

ஒரு மணித்தியாலம்

சுட்டெண் : .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.**
* ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.**
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

வினாத்தாள் - I இற்கான புள்ளித்திட்டம்

1.	3	11.	28	21.	53	31.	78
2.	5	12.	30	22.	55	32.	80
3.	8	13.	33	23.	58	33.	83
4.	10	14.	35	24.	60	34.	85
5.	13	15.	38	25.	63	35.	88
6.	15	16.	40	26.	65	36.	90
7.	18	17.	43	27.	68	37.	93
8.	20	18.	45	28.	70	38.	95
9.	23	19.	48	29.	73	39.	98
10.	25	20.	50	30.	75	40.	100

85 - 100 மிக நன்று

75 - 85 நன்று

60 - 75 சாதாரணம்

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பீடு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும்.	V/I/T/CH

www.kedu.lk

[பக். 2 ஐப் பார்க்க



zoom

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

1. தரப்பட்டுள்ள நான்கு உருக்களிலும் ஓர் உரு மாத்திரம் ஏதோவொரு வகையில் வேறுபடுகிறது. அவ்வுருவைத் தெரிவு செய்க.




A B C D




(1) (2) (3)

2. பின்வரும் இரு உருக்களையும் அவதானியுங்கள்.



உரு C




உரு D

உரு C ஆசிரியர் வரைந்த உரு ஆகும். உரு D பிள்ளையொன்று வரைந்த உருவாகும். இங்கு ஆசிரியர் வரைந்த உருவிற்கு மேலதிகமாக பிள்ளை வரைந்த பகுதிகள் எத்தனை?

(1) 1 (2) 2 (3) 3


3. பின்வரும் பிராணிகளை இரண்டை ஒரு கூட்டமாகவும் மூன்றை இன்னுமொரு கூட்டமாகவும் வகைப்படுத்தலாம். அவற்றில் இரண்டு கூட்டத்துக்குரிய பிராணிகள் எவை?



A	B	C	D	E

(1) முதலையும் நாயும் (2) பாம்பும் முதலையும் (3) எறும்பும் பூனையும்

4. P, Q, R ஆகிய தராசுகளில் உள்ள பழங்களையும் அவை குறித்து நிற்கும் நிறைகளையும் பாருங்கள்.



P Q R S

இதற்கேற்ப S தராசில் உள்ள பொருள்களின் நிறை யாது?

(1) 1kg 800g (2) 2kg 450g (3) 2kg 750g


5. 10 தொடக்கம் 15 வரையுள்ள எண்ணும் எண்களை எழுதும்போது இலக்கம் '1' எழுதப்படும் ஒற்றை எண்களின் கூட்டுத்தொகை யாது?

(1) 39 (2) 49 (3) 75


www.ikeou.lk

சுட்டெண் : .....

6. பின்வரும் கடிகார முகங்களை குறித்த இயல்புக்கேற்ப ஏறுவரிசைப்படுத்தும்போது F புள்ளிக்கோட்டில் வரவேண்டிய கடிகாரமுகம் யாது?




A B C D E .....F



(1) (2) (3)

7. கீழே தரப்பட்டுள்ள உருவில் உள்ள செங்கோண மூலைகள் எத்தனை?



(1) 12

(2) 14

(3) 16

8. உணவகத்துக்குச் சென்ற சில நண்பர்கள் ஒரு மேசைக்கு இருவர் வீதம் அமர்ந்தால் நான்கு பேர் இருப்பதற்கு மேசை இல்லை. ஒரு மேசைக்கு மூவர் வீதம் அமர்ந்தால் ஒருவருக்கு இருப்பதற்கு மேசை இல்லை. எனின், உணவகத்தில் உள்ள மேசைகளும் நண்பர்களும் முறையே,

(1) 3 மேசை 10 நண்பர்கள் (2) 4 மேசை 12 நண்பர்கள் (3) 5 மேசை 9 நண்பர்கள்

9. கோலத்திற்கு ஏற்ப ? குறியீட்டில் இடம்பெறக்கூடிய உருவும் எண்ணும் யாது?





(1) (2) (3)

10. கடையொன்றில் மூன்று பேனை அல்லது ஆறு பென்சில் ரூபாய் 60 இற்கு வாங்க முடியும். கடைக்குச் சென்ற நிலானி இரண்டு பேனையும் அதன் இருமடங்குப் பென்சிலும் வாங்கிக்கொண்டு ரூபாய் நூறு காசுத்தாளை கொடுத்தாள். எனின், அவளுக்குக் கிடைக்கும் மீதிப்பணம் எவ்வளவு?


(1) 80 (2) 40 (3) 20


11. அலரி மரத்தில் ஒரு நாளில் எட்டு பூக்கள் மலரும் அதேவேளை மூன்று பூக்கள் உதிரும். எட்டாவது நாள் இறுதியில் மரத்தில் உள்ள பூக்கள் எத்தனை?

(1) 24 (2) 40 (3) 64

www.lkedu.lk

12. கட்டத்தில் உள்ள தொகுதியுடன் சேர்ப்பதற்கு மிகப்பொருத்தமான உரு எது?






(1)



(2)



(3)

13. உதைப்பந்தாட்டப் போட்டி ஒன்றை பார்வையிடுவதற்கு வந்த மூன்று மாவட்டத்தினரின் எண்ணிக்கைகள் பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளன.

கண்டி - 258	கொழும்பு - 262	மாத்தறை - 243

இதற்கேற்ப ஒரு மாவட்டத்தில் இருந்து வருகை தந்த பார்வையாளர்களில் ஆண்களின் எண்ணிக்கையானது பெண்களின் எண்ணிக்கையிலும் 7 அதிகம் எனின், அந்த மாவட்டத்தில் இருந்து வருகை தந்த பெண்களின் எண்ணிக்கை எத்தனை?

(1) 129 (2) 125 (3) 118

14. மரியாள் ஒவ்வொரு மாதமும் இறுதி ஞாயிற்றுக்கிழமை தேவாலயத்திற்குச் செல்வாள். 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் நாள் சனிக்கிழமை ஆகும். மரியாள் இறுதியாக ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதி தேவாலயத்திற்குச் சென்றாள் எனின், எஞ்சிய இரு மாதங்களிலும் அவள் தேவாலயத்திற்குச் செல்லக்கூடிய நாள் எது?

(1) நவம்பர் 30 உம் டிசம்பர் 31 உம்

(2) நவம்பர் 27 உம் டிசம்பர் 25 உம்

(3) நவம்பர் 26 உம் டிசம்பர் 31 உம்

15. ஒரு வீட்டில் கமல், சுரேஷ், ராதா, தேவிபிரியா மற்றும் தவம் ஆகியோர் கூட்டாக வாழ்ந்தனர். கமலின் தந்தை தவம் ஆவார். சுரேஷ் தேவிபிரியாவின் மகன் அல்ல பேரன் ஆவான். ராதா தவத்தின் மனைவி அல்ல. இதற்கேற்ப சரியான கூற்றைத் தெரிவு செய்க?

(1) ராதா சுரேஷின் மாமி ஆவார்.

(2) ராதா தேவிபிரியாவின் மகள் ஆவார்.

(3) கமலின் மனைவி ராதா ஆவார்.

16. ஒரு விருந்துபசார நிகழ்வில் தனு, கீதா, பவித்ரா, நிசாந்தி, வனிதா ஆகியோர் கலந்து கொண்ட விதம் பின்வருமாறு.

- கீதா பவித்ரா வருவதற்கு முன்பு வருகை தந்தாள்.
- வனிதா நிசாந்தி வந்த பின்பே வருகை தந்தாள்.
- பவித்ரா வந்தவுடன் மூன்று பேர் வருகை தந்தனர்.

இதற்கேற்ப விருந்துபசார நிகழ்விற்கு முதலிலும் இறுதியிலும் வந்தவர்கள் முறையே,

(1) கீதா, தனு (2) கீதா, நிசாந்தி (3) பவித்ரா, தனு

17. பின்வரும் சம்பவத்திற்குப் பொருத்தம் குறைந்ததாக கருதக்கூடிய பழமொழியைத் தெரிவு செய்க.

ஒருவர் தமது நண்பருடன் ஒரு காட்டின் நடுவே செல்லும்போது ஒரு பயங்கரமான புலி முன்னால் வருவதைக் கண்டு தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக ஒரு மரத்தில் ஏறினார். மற்றயவர் இறந்தவர்போல படுத்துக்கிடந்தார்.


(1) வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்

(2) அன்பான சிநேகிதனை ஆபத்தில் அறியலாம்


(3) கிணற்றுத் தவளை போல

www.ikeu.lk


18. சதுரவடிவக் கடதாசியை உரு 1, 2 இல் உள்ளவாறு மடித்தபின் உரு 3 இல் உள்ளபடி அம்புக்குறி வழியே இருமுறை சுழற்றிய பின் உரு 4 இல் உள்ளவாறு வெட்டி நீக்கிய பின்பு கடதாசியை விரிக்கும்போது கிடைக்கும் உரு யாது?



உரு 1




உரு 2




உரு 3




உரு 4



(1)



(2)



(3)

19. உடைந்த கண்ணாடிக்கோலின் நான்கு பகுதிகள் கீழே தரப்பட்டுள்ளன.



A B C D

கண்ணாடிக்கோலை ஆக்குவதற்கு இப்பகுதிகளைச் சரியாகப் பொருத்த வேண்டிய விதத்தைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

(1) D C A B (2) A C B D (3) D C B A

20. ஒரு வீதியின் மூன்று கம்பங்களுக்கிடையே நான்கு கொடிகள் வீதம் தொங்கவிட்டு அவ்வீதியை அலங்கரிக்கத் தீர்மானிக்கப்பட்டது. வீதியில் தொங்கவிப்பட்ட கொடிகள் 16 ஆக இருந்தால் அவ்வீதியில் காணப்படும் மின்கம்பங்கள் எத்தனை?

(1) 8 (2) 9 (3) 12

21. ஒரு பேருந்தில் உள்ள ஆண் பயணிகளின் எண்ணிக்கை அதில் உள்ள பெண் பயணிகளின் எண்ணிக்கையின் மூன்று மடங்காகும். அடுத்த தரிப்பிடத்தில் பேருந்தில் இருந்த மொத்தப் பயணிகளின் எண்ணிக்கையின் நான்கில் ஒரு பகுதி ஆண்கள் இறங்கும் அதேவேளை அதற்குச் சமமான எண்ணிக்கையில் பெண்கள் ஏறினர். இப்போது பேருந்தில் உள்ள ஆண்களின் எண்ணிக்கையும் பெண்களின் எண்ணிக்கையும்,

(1) சமமாகும் (2) சமனன்று (3) கூறுவது கடினம்

22. பிள்ளையொன்று வீட்டிலிருந்து வெளியே செல்லும்போது வடக்குத் திசையில் மணிக்கூட்டுக் கோபுரமும் கிழக்குத் திசையில் பாடசாலையும் மேற்குத் திசையில் பேருந்துத் தரிப்பிடத்தையும் தெற்கே நூலகத்தையும் சென்றடைய முடியும். பிள்ளையொன்று வீட்டிலிருந்து காலையில் பயணிக்கும்போது நிழல் பிள்ளையை பின் தொடர்ந்தது எனில், பிள்ளை செல்லும் இடம் யாது?

(1) பேருந்துத் தரிப்பிடம் (2) பாடசாலை (3) மணிக்கூட்டுக் கோபுரம்

23. ஒரு பாடசாலையில் தரம் ஒன்றிக்கு ஐந்து வருடங்களில் சேர்த்துக் கொள்ளப்பட்ட பிள்ளைகளின் எண்ணிக்கை தொடர்பான விபரம் கீழே அட்டவணையின் மூலம் காட்டப்பட்டுள்ளது.

2018	2019	2020	2021	2022
90	100	120	150	190

பிள்ளைகள் சேர்த்துக் கொள்ளப்பட்ட எண்ணிக்கையின் அடிப்படையில் 2023 ஆம் ஆண்டில் சேர்த்துக் கொள்ளப்படத்தக்க பிள்ளைகளின் எண்ணிக்கை யாது?

(1) 210 (2) 240 (3) 250

www.ikeu.lk

24. 2 மாதுளை = 1 அன்னாசி


2 அன்னாசி = 1 பலாப்பழம்


எனின், பின்வரும் அட்டவணைக்கேற்ப கூடுதலான பணத்தைக் கொடுக்க வேண்டியவர் யார்?


அன்வர்	வினோத்	சீலா	சாந்தன்
2 மாதுளை	4 மாதுளை	1 மாதுளை	2 மாதுளை
1 அன்னாசி	2 அன்னாசி	2 அன்னாசி	1 அன்னாசி
1 பலாப்பழம்	1 பலாப்பழம்	2 பலாப்பழம்	2 பலாப்பழம்

(1) அன்வர் (2) சாந்தன் (3) சீலா

25. ஒரு குறித்த கோலத்தை உருவாக்குவதற்கு சதுரத்தை ஒரு தடவையும், சதுரத்தின் இருமடங்குச் செவ்வகத்தையும் சதுரத்தினதும் செவ்வகத்தினதும் கூட்டுத்தொகைக்குச் சமமான வட்டத்தையும் வட்டத்தின் எண்ணிக்கையுடன் ஒன்று கூடிய எண்ணிக்கையிலான முக்கோணத்தையும் பயன்படுத்தி அமைக்கக்கூடிய கோலம் எது?


(1)


(2)


(3)


26. கண்ணனின் தற்போதை வயது கமலின் வயதின் இருமடங்காகும். வினோதின் வயது இரண்டு வருடங்களின் பின் 12 ஆகும். கமலின் தற்போதைய வயது 8 எனில், மூவரினதும் தற்போதைய வயதுகளின் கூட்டுத்தொகை யாது?

(1) 24 (2) 34 (3) 36

27. வரிசையொன்றில் 15 பிள்ளைகள் நின்றனர். ஆராவின் வலது கைப்பக்கத்தில் 9 பிள்ளைகளும் ஆராவின் இடது கைப்பக்கத்தில் 5 பிள்ளைகளும் நின்றனர். மாலாவின் வலது பக்கத்தில் 4 பிள்ளைகளும் இடது கைப்பக்கத்தில் 10 பிள்ளைகளும் நின்றனர். அதன்படி ஆராவிற்கும் மாலாவிற்கும் இடையில் நின்ற பிள்ளைகளின் எண்ணிக்கை யாது?


(1) 3 (2) 4 (3) 5

28. கோலத்துக்கு ஏற்ப ? குறியீட்டுக்குப் பொருந்தும் எண் யாது?



(1) 9
(2) 10
(3) 11


29. தரப்பட்டுள்ள மெழுகுவர்த்திகளை அவை எரிந்த கனத்திற்கு ஏற்ப ஒழுங்குபடுத்துவதற்கு செய்ய வேண்டிய ஆகக்குறைந்த மாற்றங்கள் எத்தனை?



(1) ஒன்றினது (2) இரண்டினது (3) மூன்றினது

www.ikeou.lk

30. கீழே தரப்பட்டுள்ள ஒரு தாயக்கட்டையின் A, B, C ஆகிய மூன்று அமைவினையும் பாருங்கள்.



A B C

- A தாயக்கட்டையில் உள்ள மூன்று உருக்களினதும் கூட்டுத்தொகை 14 ஆகும். B தாயக்கட்டையில் உள்ள மூன்று உருக்களினதும் கூட்டுத்தொகை 10 ஆகும்.
- A தாயக்கட்டையில் உள்ள ⊕ இன் எதிர்ப்பக்க உருவின் பெறுமானம் 2 ஆகும்.
- C இல் உள்ள மூன்று உருக்களினதும் கூட்டுத்தொகை 12 ஆகும். ✦ இன் பெறுமானம் 3 ஆகும்.

இதன்படி ↻ இன் எதிர்ப்பக்க உருவின் பெறுமானம் யாது?

(1) 5 (2) 6 (3) 7


31. கடையொன்றில் மூன்று யோகட் வெற்று கோப்பைகளை கொடுத்தால் ஒரு யோகட் கோப்பை இலவசமாகக் கிடைக்கும். 11 வெற்று யோகட் கோப்பைகளை வைத்திருக்கும் ஒருவருக்கு கிடைக்கக்கூடிய ஆகக்கூடிய யோகட் கோப்பைகளின் எண்ணிக்கை யாது?

(1) 4 (2) 5 (3) 6

32. ஊடுகாட்டும் கடதாசித்துண்டு A ஊடுகாட்டும் கடதாசித்துண்டு B



கடதாசித்துண்டு A இருக்கும் குறியீடு + இன் மீது கடதாசித்துண்டு B இல் இருக்கும் குறியீடு இருக்குமாறு □ கடதாசித்துண்டு A இன் மீது, B இனை வைக்கும்போது காணத்தக்க உரு பின்வருவனவற்றுள் யாதாக இருக்கலாம்?



(1) (2) (3)

33. கீழே தரப்பட்டுள்ள A, B, C, D ஆகிய நான்கு டொமினோ அட்டைகளையும் அவதானியுங்கள்.



A B C D

இந்நான்கு டொமினோ அட்டைகளையும் கீழேயுள்ள டொமினோ அட்டையைக் கொண்டு ஒழுங்கமைத்தால் பெறப்படும் சரியான விடை யாது?



(1) B, C, D, A (2) B, C, A, D (3) B, A, C, D

34. ஒரு சைக்கிளை வாங்குவதற்கு ரூபாய் 10500 தேவைப்பட்டது. என்னிடம் ஒரு குறித்த தொகைப்பணம் இருந்தது. மீதியை இரு நண்பர்களிடம் இருந்து பெற்றுக்கொண்டேன்.

- முதலாவது நண்பன் வழங்கிய பணம் என்னிடம் இருந்த பணத்திலும் இருமடங்காகும்.
- இரண்டாவது நண்பன் வழங்கிய பணம் முதலாவது நண்பன் வழங்கிய பணத்திலும் இருமடங்காகும்.

இதற்கேற்ப என்னிடம் ஆரம்பத்தில் இருந்த பணம் எவ்வளவு?

(1) 1500 (2) 3000 (3) 6000

www.ikeau.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

35. ஒரு பிள்ளை அதன் வயது 10, 16 ஆக இருக்கும்போது பிரபல்யமான இரு பரீட்சைகளுக்குத் தோற்ற வேண்டும். கீதா நிலானியிலும் பார்க்க ஐந்து வயதினால் மூத்தவள். கீதா முதலாவது பரீட்சைக்கு 2022 ஆண்டில் தோற்றுவாராயின் நிலானி இரண்டாவது பரீட்சைக்குத் தோற்ற வேண்டிய நூற்றாண்டு, தசாப்தம் யாது?

(1) 21ஆம் நூற்றாண்டு 3 ஆம் தசாப்தம்

(2) 21ஆம் நூற்றாண்டு 4 ஆம் தசாப்தம்

(3) 20ஆம் நூற்றாண்டு 4 ஆம் தசாப்தம்

36. ஒரு கண்ணாடி போத்தலில் 34 மாபிள் குன்றுகள் காணப்படுகின்றன. கமல், சீலா, வசீம் ஆகிய மூவரும் மாபிள்களை எடுத்துச்சென்ற விதம் பின்வருமாறு.

கூற்று 1 - கமல் மொத்த மாபிள் குன்றுகளில் $\frac{1}{3}$ ஐயும் மிகுதி ஒன்றையும் எடுத்துச் சென்றான்.

கூற்று 2 - சீலா எஞ்சிய மாபிள் குன்றுகளில் $\frac{1}{3}$ ஐயும் மிகுதி ஒன்றையும் எடுத்துச் சென்றாள்.

கூற்று 3 - வசீம் எஞ்சிய மாபிள் குன்றுகளில் $\frac{1}{3}$ ஐயும் மிகுதி ஒன்றையும் எடுத்துச் சென்றான்.

இதற்கேற்ப மூவரும் மாபிள் குன்றுகளை எடுத்துச்சென்ற பின்னர் எஞ்சும் மாபிள் குன்றுகள் எத்தனை?

(1) 1 (2) 5 (3) 10

37. சரியான கோவையைத் தெரிவு செய்க.

(1) $3 + 4 \times 5 = 23$ (2) $5 + 2 \times 5 = 35$ (3) $1 + 7 \times 4 = 32$

38. ஒரு வாகன பழுதுபார்க்கும் நிறுவனத்தில் மோட்டார்சைக்கிள்கள், முச்சக்கரவண்டிகள் மற்றும் கார்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. இங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்களின் மொத்த எண்ணிக்கை 17 ஆகும். அவற்றின் சில்லுகளின் எண்ணிக்கை 48 ஆகும்.

இதற்கேற்ப மோட்டார் சைக்கிள்களினதும் கார்களினதும் மொத்த எண்ணிக்கை 13 எனின், கார்களின் எண்ணிக்கை யாது?

(1) 4 (2) 5 (3) 6

39. ஒரு தொழிற்சாலையில் பணிபுரியும் ராதா மூன்று நாட்கள் வேலை செய்தால் ஒருநாள் விடுமுறையும் ரவி நான்கு நாட்கள் வேலை செய்தால் ஒருநாள் விடுமுறையும் கிடைக்கும். இருவருக்கும் யூலை 5 ஆம் நாள் ஒன்றாக விடுமுறை வழங்கப்பட்டது. மீண்டும் எப்போது ஒன்றாக விடுமுறை வழங்கப்படும்?

(1) யூலை - 21 (2) யூலை - 23 (3) யூலை - 25

40. A, B, C என்னும் மூன்று மரங்களில் பறவைகள் பின்வருமாறு இருக்கின்றன.

- மரம் C இல் இருக்கும் பறவைகளின் எண்ணிக்கையிலும் பார்க்க இருமடங்குப் பறவைகள் மரம் B இல் இருக்கின்றன.
- மரம் A இல் உள்ள பறவைகளின் எண்ணிக்கை மரம் C இல் உள்ள பறவைகளின் எண்ணிக்கையின் மூன்று மடங்காகும்.
- மூன்று மரங்களிலும் உள்ள பறவைகளின் மொத்த எண்ணிக்கை 42 ஆகும்.

இதற்கேற்ப மரம் A இல் உள்ள பறவைகளின் எண்ணிக்கை மரம் C இல் உள்ள பறவைகளின் எண்ணிக்கையின்,

(1) இருமடங்காகும் (2) மூன்று மடங்காகும் (3) நான்குமடங்காகும்

* * *

www.ikedu.lk

සියලුම හිමිකම් ඇවිරිණි]
මුලුප්පතිප්පුරිමையுடையது]
All Rights Reserved]

2022

ஆசிரியர் : ஏ.எம். சனூஸ்

அறிவுத்தாரகை ARIVUTHTHARAHAI 5

EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES, MODEL, 2022

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை, 2022

இறுதிக் கருத்தரங்கு

12

வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண் : .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* இவ்வினாத்தாளில் **60** வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.** (சில வினாக்களில் உப பகுதிகள் உள்ளன.)
* விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் **புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
* விடையின் கீழ்க் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும் போது **கோட்டினை மாத்திரம் இடுக.**
* மூன்று விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களில் **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.**
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

வினாத்தாள் - II இற்கான புள்ளித்திட்டம்

1.	6	11.	2	21.	2
2.	2	12.	2	22.	2
3.	1	13.	2	23.	4
4.	2	14.	1	24.	2
5.	1	15.	1	25.	2
6.	1	16.	2	26.	2
7.	2	17.	2	27.	2
8.	3	18.	2	28.	2
9.	2	19.	2	29.	4
10.	2	20.	2	30-59	30

85 - 100 மிக நன்று

75 - 85 நன்று

60 - 75 சாதாரணம்

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/II/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/II/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பீடு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/II/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும்.	V/II/T/CH

www.ikeu.lk

[பக். 2 ஐப் பார்க்க





மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

1. பின்வரும் பந்தியை வாசியுங்கள்.

இஸ்லாமிய வருடத்தில் ஹஜ் மாதம் கடைசி மாதம் ஆகும். இம்மாதத்தில் உலகிலுள்ள இஸ்லாமியர்கள் மக்கா நகரில் ஒன்று கூடி ஹஜ் கிரிகைகளை மேற்கொள்வர். அப்போது, உலகிலுள்ள ஏனைய இஸ்லாமியர்கள் அனைவரும் ஹஜ்ஜுப்பெருநாளை தமது விடுகளில் கொண்டாடுவார்கள். பெருநாள் தினத்தன்று புத்தாடை அணிந்து பள்ளிவாசலுக்குச் சென்று இறைவழிபாட்டில் ஈடுபடுவதுடன் அன்றைய தினம் பிரதான உணவாக பிரியாணி உண்பார்கள். உற்றார் உறவினருக்கு வட்டிலப்பம், தொதல், மஸ்கற் போன்ற இனிப்புப் பண்டங்களைப் பரிமாறிக் களிப்புறுவர்.

● பந்தியைத் **துணையாகக்** கொண்டு விடை எழுதுக.

(i) இஸ்லாமிய வருடத்தில் கடைசி மாதம் யாது?

.....

(ii) உலகிலுள்ள இஸ்லாமியர் ஹஜ் கிரிகைக்காக ஒன்று கூடும் இடம் எது?

.....

(iii) பந்தியில் இடம்பெறும் இணைமொழிச் சொல்லை எழுதுக?

.....

(iv) 'மகிழ்ச்சியடைவர்' என்ற கருத்தைத் தரும் சொல்லை பந்தியிலிருந்து தெரிவு செய்து எழுதுக?

.....

(v) பந்தியில் குறிப்பிடப்படும் இனிப்புப் பண்டங்கள் எவை?

.....

(vi) **'புத்தாடை'** என்ற சொல்லைப் பிரித்து எழுதுக?

.....

2. பின்வரும் வாக்கியங்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக.

(i) பூக்களில் வண்டுகள் தேன் குடிக்கும்.

.....

(ii) நேற்று மலை பெய்தது.

.....

3. பொருத்தமான இடங்களில் நிறுத்தக் குறிகளை இடுக.

ஐயா ☐ உங்களுக்கு நீச்சல் தெரியுமா ☐

4. பின்வரும் வாக்கியங்களில் புள்ளிக்கோடிட்ட இடங்களுக்குப் பொருத்தமான சொற்களை கட்டத்தினுள் இருந்து தெரிவு செய்து எழுதுக.

மெதுவாக, தெளிவாக, அமைதியாக, சரியாக

(i) தாத்தா எதுவும் பேசாமல் ..... இருந்தார்.

(ii) அவர் ..... நடந்து வைத்தியசாலைக்குக்குச் சென்றார்.

5. இடைவெளிக்குப் பொருத்தமான ஒலிமரபை எழுதுக.

ஆந்தை : அலறும் அதுபோல மயில் : .....

6. தரப்படும் பழமொழியின் கருத்தை புள்ளிக்கோட்டில் எழுதுக.

சூடுகண்ட பூனை அடுப்பங்கரையை நாடாது.

.....

www.lkedu.lk

சுட்டெண் : .....

7. தரப்படும் வாக்கியங்களில் உள்ள இடைவெளிக்குப் பொருத்தமான சொற்களை அடைப்பினுள் இருந்து தெரிவு செய்து எழுதுக.

அல்லும் பகலும் / குடுகுடு / கரடு முரடு / கணீர் கணீர்

(i) ஆலயமணி ..... என்று ஒலித்தது.

(ii) அந்தவீதி ..... ஆகக் காணப்பட்டது.


8. தரப்படும் குறுக்கெழுத்துக் கட்டங்களில் வரவேண்டிய சொல்லை எழுதி கட்டங்களைப் பூர்த்தி செய்க.

இடமிருந்து வலம்

1. ஆமணக்கின் உள்ளீட்டு மரபுப்பெயர்
3. மாப்பொருள் உணவு வகைகளில் ஒன்று

மேலிருந்து கீழ்

2. முன்னாலும் பின்னாலும் பறக்கும் பூச்சியினம்



9. தரப்படும் தொடர்மொழிக்குப் பொருத்தமான ஒருமொழிச் சொல்லை எழுதுக.

(i) தன்னைப்பற்றி தானே எழுதம் சரிதை .....

(ii) வீண் செலவு செய்பவன் .....

10. பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.

(i) மரம் + கொம்பு : .....

(ii) ஆறு + மலை : .....

11. கீழே தரப்பட்ட ஒவ்வொரு படத்திற்குப் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிலேயே எழுதுக.

(i)



R						

(ii)



S									

12. தரப்பட்டுள்ள ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

(i) Tooth brush ..... (ii) Water melon .....

13. கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.

(i) flowers / How / are / many / there?

.....

(ii) I / you / help / vegetables / cut / to

.....

14. 'பிட்டுபச' என்னும் சிங்களச் சொல்லின் கருத்தை **தமிழில்** எழுதுக.

.....

www.lkedu.lk

15. பின்வரும் வாக்கியம் **சிங்களத்தில்** கூறப்படும் விதத்தை தமிழில் எழுதுக.
இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள். .....

16. 'பன்னிரண்டாயிரத்து அறுநூற்றெழுபது' இந்த எண்ணில் இலக்கம் ஆறு குறிக்கும் பெறுமானம் யாது?
.....

17. 7000 + 400 + 0 + 5 இடப்பெறுமானத்துக்கு ஏற்ப அதன் எண் பெறுமானத்துடன் ஒன்று கூடிய எண் யாது?
.....

18. எண்கோலத்திற்கு ஏற்ப வெற்றிடங்களில் இடம்பெற வேண்டிய எண்களை எழுதுக?
....., ..., 8, 16, 32, 64


18.

4	2
6	

கட்டத்தினுள் உள்ள இலக்கங்களைக் கொண்டு ஆக்கக்கூடிய மிகப்பெரிய எண்ணை 6 இனால் வகுக்கும்போது கிடைக்கும் எண்ணை எழுதுக?
.....

20. 500 சஞ்சிகைகளை அச்சிடுவதற்கு 6 மணித்தியாலம் சென்றது. முற்பகல் 5.30 மணிக்கு சஞ்சிகைகள் அச்சிட ஆரம்பிக்கப்பட்டதெனில் எத்தனை மணிக்கு நிறைவடையும்?
.....

21. மாலா 6 பென்சில்கள் கொண்ட 5 பெட்டிகளை வாங்கினாள். அவளது நண்பிகள் மூவருக்குச் சம எண்ணிக்கையான பென்சில்களைப் பகிர்ந்து வழங்கினாள். எனின், ஒரு நண்பிக்குக் கிடைத்த பென்சில்கள் எத்தனை?
.....

22. 

உருவில் நிழற்றப்பட்ட பகுதியைப் பின்னமாகத் தருக.

.....

23. ஒரு மரத்தில் 235 மாங்காய்களும் இன்னுமொரு மரத்தில் 118 மாங்காய்களும் பறிக்கப்பட்டதுடன் அவற்றில் 75 விற்பனை செய்யப்பட்டன.

(i) இரு மரத்திலும் பறிக்கப்பட்ட மொத்த மாங்காய்கள் எத்தனை?
.....

(ii) விற்பனை செய்யப்பட்ட பின்னர் மிகுதி மாங்காய்கள் எத்தனை?
.....

24. 5 லீற்றர் கொள்ளக்கூடிய நீர்த்தொட்டி ஒன்றில் தற்போது 3 லீற்றர் 500 மில்லிலீற்றர் நீர் நிரம்பியுள்ளது. தொட்டியில் முழுமையாக நிரப்ப மேலும் தேவையான நீரின் அளவு யாது?
..... லீற்றர் ..... மில்லிலீற்றர்

25. ஒரு பப்பாசிப்பழத்தின் நிறை 1 கிலோகிராம் 50 கிராம் ஆகும். மற்றுமொரு பப்பாசிப்பழத்தின் நிறை 1 கிலோகிராம் 75 கிராம் ஆகும். இரண்டு பப்பாசிப்பழங்களினதும் மொத்த நிறை யாது?
..... கிலோகிராம் ..... கிராம்

www.ikeou.lk

26. இரண்டு சதுரமுகிகளை ஒன்டோடொன்று இணையுமாறு பசையினால் ஒட்டி நிறம் தீட்டப்பட்ட பின்னர் பெறப்படும் திண்மம் யாது?

.....


27. ராசிக் 2 கிலோமீற்றர் 500 மீற்றர் தூரம் துவிச்சக்கர வண்டியை ஓட்டிச் சென்றதுடன், குமாருக்கு 1 கிலோமீற்றர் 250 மீற்றர் மட்டுமே செல்ல முடிந்தது. ராசிக் சென்ற தூரத்தைக் கடப்பதற்கு குமார் இன்னும் எவ்வளவு தூரம் செல்ல வேண்டும்?

..... கிலோமீற்றர் ..... மீற்றர்

28. முகம்மதுவிடம் இருந்த 400 ரூபாய் பணத்தில் அவர் தனது நண்பர்கள் இருவருக்கு 100 ரூபாய் வீதம் கொடுத்திருப்பாராயின் முகம்மதுவிடம் தற்போது எவ்வளவு பணம் உள்ளது?

ரூபாய் .....

29. ஒரு பாடசாலையில் ஐந்தாம் தர வகுப்பு மாணவர்கள் விரும்பும் செல்லப் பிராணிகளின் எண்ணிக்கை பற்றிய தகவல்கள் பின்வரும் வரைபில் காட்டப்பட்டுள்ளன.



(i) பூனையையும் அணிலையும் விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கைக்குச் சமமான வேறு இரு பிராணிகளும் எவை?

.....

(ii) செல்லப்பிராணிகளை விரும்பும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

.....

- இலக்கம் **30** தொடக்கம் **59** வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து **அதன் கீழ்க் கோடிடுக.**

30. காராமணிப் பயறு என அழைக்கப்படும் **தானியம்** எது?
(1) பாசிப்பயறு (2) கவ்வி (3) வரகு

31. பூனையிடம் காணப்படும் **விசேட இயல்பு** எது?
(1) நடப்பதற்கு கால்கள் இருத்தல்
(2) மேற்பரப்பில் ஒட்டியிருப்பதற்கு விசேட பாதங்கள் இருத்தல்
(3) இரையைக் கண்டறிவதற்கு மீசை இருத்தல்

32. தேசியவீரர் கெப்படிபொல திசாவையை ஆங்கிலேயர் கைது செய்வதற்கு **உதவியவர்** யார்?
(1) மொல்லிகொட திசாவை (2) கொங்கால கொட பண்டா (3) மீகெட்டுவத்த குணானந்த தேரர்

33. பயன்படுத்திய நீரை மீண்டும் பயனுள்ள ஒரு வழியில் பயன்படுத்தல் ஒரு சிறந்த செயற்பாடாகும். இதற்கு பொருத்தமான **செயற்பாடு** யாது?
(1) ஆடைகள் கழுவுதல்
(2) காய்கறிப் பாத்திகளுக்கு இடல்
(3) சமயலறைப் பாத்திரங்களை கழுவுதல்


www.keou.lk

34. பாடசாலையில் உள்ள உபகரணங்கள் பண்டங்கள் தொடர்பான **பதிவுகளடங்கிய ஓர் ஏடு** உண்டு. அதனை எவ்வாறு அழைப்பர்?
(1) சம்பவத்திரட்டுப் புத்தகம்
(2) பொருட் பதிவேடு (inventory)
(3) வரவு இடாப்பு

35. இரும்புச் சத்து அதிகளவில் காணப்படும் **கீரைவகைகள்** கொண்ட கூட்டம் எது?
(1) சாரணைக்கீரை, வல்லாரை, பொன்னாங்கண்ணி
(2) முளைக்கீரை, அகத்திக்கீரை, குறிஞ்சாக்கீரை
(3) முளைக்கீரை, குறிஞ்சாக்கீரை, பொன்னாங்கண்ணி


36. உணவுகளைத் தயாரிப்பதற்கும் மற்றும் சாப்பிடுவதற்கும் முன்னர் செய்ய வேண்டிய **சுகாதாரப்பழக்கம்** ஒன்று?
(1) பல்துலக்க வேண்டும்
(2) கைகளைச் சவர்க்காரமிட்டு கழுவுதல்
(3) கைகளுக்கு கையுறை போடுதல்

37. நமது முன்னோர்கள் பண்டையகாலங்களில் **நல்ல விதை நெல்லை** தெரிவு செய்வதற்காக பரிசோதித்த முறையொன்று.
(1) வெந்நீரில் இடுதல் (2) உப்பு நீரில் இடுதல் (3) குளிர்நீரில் இடுதல்

38. 
அருகிலுள்ள சட்டக் காந்தத்தை அசையவிட்டு காந்தம் ஆடியசைந்து யாதேனும் திசையில் அமையுமாறு ஓய்வை அடைந்த பின்னர் அது **காட்டும் திசை** யாது?
(1) கிழக்கு (2) தெற்கு (3) வடக்கு

39. பயிர்ச்செய்கைக்கு **சாதகமான** பிராணியும் **பாதகமான** பிராணியும் முறையே,
(1) ஆந்தை, மண்புழு (2) மண்புழு, நத்தை (3) வண்டு, மயிர்கொட்டி

40. பின்வரும் பாடல்களில் **மீனவர் பாடல்** யாது?
(1) ஆனகட்டி ஏலேலப்படி சேர்குழப்பி.....
(2) விடிவெள்ளி நம் விளக்கு ஐலசா.....
(3) ஏரைக் கொண்டு நிலம் உழுவான்.....

41. 
அருகிலுள்ள **தையல் முறை** யாது?
(1) சங்கிலித்தையல்
(2) கம்பளித்தையல்
(3) நரம்புத்தையல்

42. மனிதன் எப்போதும் **கூட்டாக** ஒரு சமூகமாகச் செயபடுகின்றமையால் சமூகத்தில் எவ்வாறு அழைக்கப்படுகின்றான்?
(1) நல்ல மனிதன் (2) சமூகப்பிராணி (3) சமூகப் பறவை

43. கருங்கல் உடைப்பவர் வெட்டுளி, கல்உடைக்கும் சுத்தியல் ஆகிய உபகரணங்களோடு **வேலை** செய்யும் போது **பாதுகாப்பிற்காக** அணிந்திருப்பது,
(1) சட்டை, கையுறை (2) தலைக்கவசம் (3) தொப்பி

www.ikedu.lk

44. யாதேனும் ஓர் இடத்திலிருந்து மற்றுமோர் இடத்துக்குச் செல்லக்கூடிய போக்குவரத்து முறைகளுள் **களனிப்பள்ளத்தாக்குப்** புகையிரதப் பாதை வழியே செல்லக்கூடியது?
(1) கொழும்பிலிருந்து மட்டக்களப்புக்கு
(2) கொழும்பிலிருந்து அவிசாவளைக்கு
(3) கொழும்பிலிருந்து மாத்தறைக்கு

45. 

அருகிலுள்ள **குறியீடு** குறித்து நிற்பது யாது?
(1) குப்பைகளை இங்கே போடவும்.
(2) குப்பைகளை இங்கே இடவேண்டாம்.
(3) பிளாத்திக்கு, கண்ணாடி கழிவுகளை இங்கே போட வேண்டாம்.


46. பின்வருவனவற்றுள் **இணையவழித்** தகவல் தொடர்பு யாது?
(1) கணினி (2) மின்னஞ்சல் (3) வானொலி

47. துட்டகைமுனு மன்னனால் அனுராதபுரத்தில் **இறுதியாக** அமைக்கப்பட்ட தூபி யாது?
(1) மிரிசவெட்டிய (2) உலோவாமஹாபாயா (3) ருவான்வெலிசாய

48. இலங்கை தேசியக் கொடியின் உள்ளேயுள்ள நான்கு அரச இலைகள் குறிக்கும் **பண்புகளில் இரண்டு.**
(1) ஒற்றுமையும் திருப்தியும்
(2) இரக்கமும் காருண்யமும்
(3) கொடியின் முழுமைப்பாடும் பற்றின்மையும்

49. சுமன் என்பரின் வீட்டுத்தோட்டத்தில் மா, முருங்கை மற்றும் நாவல் மரங்கள் காணப்பட்டன. மேற்படி இம்மரங்கள் **பூக்கக்கூடிய மாதம்** முறையே,
(1) மாசி, ஆடி, சித்திரை
(2) சித்திரை, மாசி, ஆடி
(3) மாசி, சித்திரை, ஆடி

50. மண்புழு பற்றிய **பிழையான** கூற்று யாது?
(1) மண்வளத்தை சேதப்படுத்தும்
(2) குப்பைகளை பசளையாக மாற்றும்
(3) நிலத்தில் வெந்நீர் கொட்டுவதால் இறந்துவிடும்

51. 

அருகே தரப்பட்டுள்ள பொருளொன்றின் **லேபிலில்** அவதானிக்கக்கூடியது யாது?
(1) காலாவதித் திகதியும் தரச்சின்னமும்
(2) காலாவதித் திகதியும் உற்பத்தித் திகதியும்
(3) உற்பத்தித் திகதியும் தரச்சின்னமும்

52. தகரப்பேணி, சிரட்டை ஆகிய கழிவுப்பொருள்களால் செய்யக்கூடிய **புத்தளிப்புக் கருவிகள்** முறையே,
(1) மேளம், கைத்தாளம் (2) மேளம், சலங்கை (3) சலங்கை, தாளம்

53. உலர்த்துதல், புகையூட்டுதல் ஆகிய முறைகள் உணவை **நீண்டகாலம்** பாதுகாப்பதறகு மேற்கொள்ளப்பட்ட எம்முறையாகும்?
(1) நவீன முறையாகும்
(2) பண்டைய முறையாகும்
(3) எதிர்கால பாதுகாப்பு முறையாகும்

www.lkedu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

54. அலுவலகமொன்றில் பணியாற்றிய நபரொருவர் தினமும் காலையுணவாக பாண், உரொட்டி, இடியப்பம் போன்ற மாப்பொருள் உணவுகளை உட்கொண்டார். நாளடைவில் குறித்த நோயொன்றிற்கு உட்பட்டார். **அந்நோய்,**
(1) நீரிழிவு எனும் தொற்று நோயாகும்.
(2) இரப்பையழற்சி எனும் தொற்றா நோயாகும்.
(3) நீரிழிவு எனப்படும் தொற்றா நோயாகும்.

55. நீர்ப்பாத்திரம் கொடுத்து விருந்துண்ண வரவேற்றல் யாருடைய **திருமணப் பழக்கவழக்கம்** ஆகும்?
(1) சிங்களவர்கள் (2) தமிழர்கள் (3) முஸ்லீம்கள்

56. கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள **குளம்** யாது?
(1) இரணைமடுக்குளம் (2) கலாவெவ (3) அபயவாவி

57. பொதுப்போக்குவரத்துப் பேருந்தில் **ஏறி இறங்கும்** விதம் யாது?
(1) முன்னால் ஏறி பின்னால் இறங்குதல்
(2) பின்னால் ஏறி முன்னால் இறங்குதல்
(3) விரும்பியவாறு ஏறி இறங்குதல்

58. மத்திய மலைநாடு கடுகண்ணாவ பகுதியில் அமைந்துள்ள **கோபுரம்** எது?
(1) தாமரைக் கோபுரம் (2) கப்ரன்டோசன் கோபுரம் (3) எண்கோண மண்டபம்

59. தேசிய குறியீடுகளை வெளியிடும் **திணைக்களம்** யாது?
(1) மத்திய சூழல் அதிகார சபை
(2) நில அளவைத் திணைக்களம்
(3) அரசாங்க தகவல் திணைக்களம்

60. **'எனது செல்லப் பிராணிக்கு நோய் ஏற்பட்டபோது நான் .....'** என்பதைத் தலைப்பாகக் கொண்டு மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

1. .....
.....
2. .....
.....
3. .....
.....

* * *

www.lkedu.lk

அறிவுத்தாரகை இறுதிக்கருத்தரங்கு :12

2022

வினாத்தாள் -1

1	2	11	2	21	1	31	2	
2	3	12	2	22	2	32	2	
3	2	13	3	23	2	33	2	
4	2	14	2	24	3	34	1	
5	1	15	3	25	3	35	2	
6	2	16	1	26	2	36	3	
7	3	17	3	27	2	37	1	
8	1	18	2	28	3	38	2	
9	3	19	3	29	1	39	3	
10	3	20	2	30	3	40	2	2.5*40=100

வினாத்தாள் -ii

1) i	ஹஜ் மாதம்	புள்ளி 1
ii	மக்கா நகர்	புள்ளி 1
iii	உற்றார் உறவினர்	புள்ளி 1
iv	களிப்புறுவர்	புள்ளி 1
v	வட்டிலப்பம்,தொதல்,மஸ்கற்	புள்ளி 1
vi	புதிய+ஆடை	புள்ளி 1
2) i	பூக்களில் வண்டுகள் தேன் குடிக்கும்.	புள்ளி 1
ii	நேற்று மழை பெய்தது.	புள்ளி 1
3)	ஐயா, உங்களுக்கு நீச்சல் தெரியுமா?	புள்ளி 1
4) i	அமைதியாக	புள்ளி 1
ii	மெதுவாக	புள்ளி 1
5)	அகவும்	புள்ளி 1
6)	அனுபவம் ஆபத்து வராமல் தடுக்கும்.	புள்ளி 1
7) i	கணீர் கணீர்	புள்ளி 1
ii	கரடு முரடு	புள்ளி 1
8) i	முத்து	புள்ளி 1
ii	தும்பி	புள்ளி 1
iii	பிட்டு	புள்ளி 1
9) i	சுயசரிதை	புள்ளி 1
ii	ஊதாரி	புள்ளி 1
10) i	மரக்கொம்பு	புள்ளி 1
ii	ஆற்றுமலை	புள்ளி 1
11) i	Rainbow	புள்ளி 1
ii	strawberry	புள்ளி 1
12) i	பற்தூரிகை	புள்ளி 1
ii	தர்ப்பூசணி	புள்ளி 1
13) i	How many flowers are there?	புள்ளி 1
ii	I help you to cut vegetables.	புள்ளி 1
14)	பின்னால்	புள்ளி 1

www.kedu.lk


LEARN EASY
- KNOWLEDGE IS POWER -
www.learneasy.lk
LEARN EASY
KNOWLEDGE IS POWER
மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்
zoom
ICT
Maths
English
Commerce
Tamil
History
Science
Sinhala
இன்னும் பல
தரம்
01-A/L
Medium
தமிழ்/ English
76667-4945
தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன
www.learneasy.lk || www.lkedu.lk

15)	சுப உபன் தினயக் வேவா.	புள்ளி 1
16)	600	புள்ளி 2
17)	7406	புள்ளி 2
18)	2,4	புள்ளி 2
19)	107	புள்ளி 2
20)	மு.ப 11.30	புள்ளி 2
21)	10	புள்ளி 2
22)	4/16) 2/8) 1/4	புள்ளி 2
23). i	353	புள்ளி 2
ii	278	புள்ளி 2
24)	1l 500ml	புள்ளி 2
25)	2kg 125g	புள்ளி 2
26)	கனவுரு	புள்ளி 2
27)	1km 250m	புள்ளி 2
28)	ரூபாய் 200	புள்ளி 2
29) i	முயல்,நாய்	புள்ளி 2
ii	36	புள்ளி 2
		புள்ளி 2

30	2	40	2	50	1	
31	3	41	2	51	2	
32	1	42	2	52	1	
33	2	43	2	53	2	
34	2	44	2	54	3	
35	1	45	1	55	1	
36	2	46	2	56	1	
37	2	47	3	57	2	
38	3	48	2	58	2	
39	2	49	3	59	2	

60)	பொருத்தமான வாக்கியங்கள்	புள்ளி 2

www.lkedu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்




இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...



www.lkedu.lk

www.lkedu.lk